# ஒளி

## ம.நவீன்

தோழியிடம் இரவல் வாங்கிய நீல நிற கவுனுடன் துர்கா புகைப்படக்காரர்களுக்கு போஸ் கொடுத்தாள். அந்த கவுனில், தான் ஒரு தேவதைபோல காட்சி தரக்கூடும் என அவளாகவே நினைத்துக்கொண்டாள். வலதும் இடதும் உடலைச் சுழற்றினால் அது குடைபோல விரிந்து தன்னைப் பறக்க வைக்கும் என அவளுக்குத் தோன்றியது.

அந்தத் தொகுதியில் நாளை இடைத்தேர்தல். ஆளுங்கட்சி வேட்பாளரான திரு.குணா, ‘டுரியான் தோட்டத்தில்’ வசிக்கும் முதலாம் ஆண்டு மாணவி துர்காவுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி அது.

நாளை தேர்தல் என்பதாலும் டுரியான் தோட்டப்பள்ளி வாக்குச் சாவடிகளில் ஒன்றாகத் தேர்வு பெற்றுள்ளதாலும் தோட்டமே கோலாகலமாக இருந்தது. ஆங்காங்கு கூடாரங்கள் உருவாகியிருந்தன. காணும் இடமெல்லாம் வேட்பாளர்களின் படங்களும் சுவரொட்டிகளும் நிறைத்திருந்தன. தோட்டத்தை விட்டு வெளியேறி அருகில் இருந்த நவீன குடியிருப்புகளில் வசித்த சிலரது தலைகளும் ஆங்காங்கு தெரிந்தன. இடைத்தேர்தலுக்காக விதிக்கப்பட்ட சிறு தளர்வை மக்கள் நன்றாகவே பயன்படுத்திக்கொண்டனர்.

நிகழ்ச்சி முடிந்தபிறகு திரு.குணா, தோட்ட மக்களைச் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். தான் வெற்றி பெற்றவுடன் நிச்சயம் பாழடைந்து கிடந்த தோட்டத்து மாரியம்மன் கோயிலுக்கு சாயம் அடித்துக்கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார். மேலும் அடுத்த வரும் திருவிழாவுக்கு அம்மனை நகர் வலம் அழைத்துச் செல்ல புதிய தேர் ஒன்றையும் வாங்கி தருவதாகக் கூறினார். எல்லாரும் பலமாகக் கைத்தட்டினர்.

மடிக்கணினியைப் பெற்றுக்கொண்ட துர்கா அதற்கு மேல் என்ன செய்வதெனத் தெரியாமல் மௌனமாக வீட்டின் வரவேற்பறையில் சென்று அமர்ந்தாள். வெள்ளி நிறத்தில் மின்னிய அந்த மடிக்கணினியின் மேல்மூடியை மெல்லத் தூக்கினாள். அது தோட்டத்தில் மேயும் சேவலின் இறக்கைபோல மென்மையாகச் சத்தமின்றி விரிந்தது. அந்த மடிக்கணினியை எப்படி செயல்படுத்துவது எனத் தெரியாமல் கருந்திரையில் தெரிந்த தனது நிழல் முகத்தைப் பார்த்தாள். தான் உண்மையில் தேவதை போலத்தான் இருக்கிறோமா என அவளுக்குச் சந்தேகம் வந்தது. தேவதையின் மகிழ்ச்சி எதையும் தன் முகத்தில் அவள் காணவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்புவரை அவளுக்கு இந்தச் சிக்கல் இல்லை. கோவிட் பெருந்தொற்றினால் பள்ளிக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாததே அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பெரும்பாலும் இந்தோனேசியர்கள் குடியேற்றப்பட்டுவிட்ட அந்தத் தோட்டத்தில் நான்கு இந்திய குடும்பங்கள் மட்டுமே இருந்தன. அதில் இரண்டு குடும்பங்களில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்களும் ஒரு குடும்பத்தில் இளம் தம்பதியும் வசித்தனர். அந்தத் தோட்டத்தில் இருந்த ஒரே சிறுமி துர்கா மட்டுமே. எனவே அவள் எல்லாருக்கும் செல்லப்பிள்ளையாக இருந்தாள். தோட்டத்தில் திரியும் பறவைகள் போலவே அவள் எல்லா இடங்களிலும் ஓடி ஆடித்திரிவாள். ஒவ்வொரு வீட்டிலும் தின்பண்டங்களைச் சாப்பிட்டு மகிழ்வாள். சிலசமயம் அங்கேயே படுத்து உறங்கியும் விடுவாள். தோட்டத்தில் அவள் பொழுதுகள் உற்சாகமாகக் கழிந்தன. தன் மகிழ்ச்சியெல்லாம் அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் திடீர் பதவி விலகலால் கரைந்துவிடும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

இடைத்தேர்தல் பிரசாரத்திற்காக டுரியான் தோட்டத்துக்கு வந்த எதிர்க்கட்சித் தலைவர் ராஜேந்திரனுக்கு வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பார்த்து முதலில் ஏமாற்றமாகத்தான் இருந்தது. அந்தத் தோட்டம் நகரத்தைவிட்டு மிகவும் உட்புறத்தில் அமைந்திருந்தது. சுமார் ஏழு கிலோ மீட்டர் செம்மண் சாலையில் பயணம் செய்ய வேண்டும். அவரது புத்தம் புதிய வெள்ளை நிற கேம்ரி காரில் செம்மண் அப்பியதை அவரால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. சலிப்புடன் புறப்பட இருந்த அவர் கண்ணில் துர்கா பட்டுவிட, அவள் கல்வி நிலவரம் பற்றி சாதாரணமாகத்தான் விசாரித்தார். இணைய வழி கற்றலுக்குத் தகுந்த சாதனம் தன்னிடம் இல்லாததால் பள்ளியில் ஏற்பாடு செய்துள்ள வகுப்புகளில் கலந்துகொள்வதில்லை என துர்கா கூறவும் துடித்துப் போய்விட்டார்.

மறுநாளே, ‘ஆளுங்கட்சி ஆட்சியில் ஓர் ஏழைச் சிறுமியின் அவலநிலை’ என்ற தலைப்பில் மூன்று தமிழ் நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தி வெளியானது. அதற்கு அடுத்த நாள் அனைத்து ஊடக கவனமும் ‘டுரியான் தோட்டம்’ பக்கம் திரும்பியது. சமூக ஊடகங்களில் அவரவர் வீடியோ செய்து ஆளுங்கட்சியை விமர்சித்தனர். தொடர்ந்து, எதிர்க்கட்சி வேட்பாளர் புத்தம் புதிய ‘சாம்சுங்’ கைபேசி ஒன்றை துர்காவுக்குப் பரிசளித்த காட்சி சமூக ஊடகங்களில் பரவலாகியது. கைபேசி வழங்கும் நிகழ்ச்சி டுரியான் தோட்டத்தை ஒட்டியிருந்த நகர மண்டபத்தில் நடைபெற்றது. வாழைமரம் தோரணங்களெல்லாம் கட்டி மண்டபம் அலங்கரிப்பட்டிருந்தது. ராஜேந்திரன் வெள்ளை வேட்டி சட்டையுடன் வந்தார். “நான் இடைத்தேர்தலில் வெற்றியடைந்தால் இதுபோல அனைத்துப் பிள்ளைகளின் கற்றல் சிக்கலையும் போக்குவேன்” என சூளுரைத்துவிட்டுச் சென்றார். அப்போதும் துர்கா நீல நிற

கவுனைத்தான் அணிந்திருந்தாள். அவள் அப்பா அவசரமாக நகரத்தில் வசித்த அவள் தோழி பிரேமாவிடம் இரவல் வாங்கி வந்த உடை அது. தன் கவுன் டிவியில் வரும் என்ற சமாதானச் சொற்களை நம்பி பிரேமா கவுனை இரவல் கொடுத்திருந்தாள்.

கைபேசி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தலைமை ஆசிரியர், அவள் எவ்வாறு இணைய வழி கற்றலில் இணைய வேண்டும் என விரிவாக விளக்கம் கொடுத்தார். எப்போதும் தளர்ந்த உடலும் கடுகடுப்பான முகமுமாக இருக்கும் அவர், தொலைக்காட்சியில் கருணை பொருந்திய முகத்துடன் துடிப்புடன் விளக்கங்களைக் கூறினார். அவளும் தனது கூகுள் ஐடி, கடப்பு எண், என அனைத்தையும் குறிப்பெடுத்துக்கொண்டாள். கைபேசியில் ஆசிரியர்களையும் நண்பர்களையும் பார்க்கப்போவது அவளுக்கு மிகுந்த உற்சாகமாக இருந்தது. அந்த நீல கவுனில் தன்னைப் பார்த்தால் என்ன சொல்வார்கள் என நினைக்கவே மனமெல்லாம் உற்சாகம் பொங்கியது. அவள் அப்பாவிடம் உள்ள பொத்தான்களை அழுத்தும் கைபேசிபோல இல்லாமல் அதன் திரையை மென்மையாக நகர்த்த முடிவதை எண்ணி ஆச்சரியப்பட்டாள். தோட்டத்து ஓடை நீரில் மிதக்கும் பூச்சிகள்போல தன் விரல்கள் அந்தத் தொடு திரையில் நகர்வதாக உணர்ந்தாள். கைபேசியுடன் தோட்டத்துக்குள் நுழைந்தபோதுதான் அவள் புதிய சிக்கலை எதிர்கொண்டாள்.

மறுநாளே ‘எதிர்க்கட்சியின் ஏமாற்றுத்தனம்’ என்ற தலைப்பில் மீண்டும் துர்கா தலைப்புச் செய்தியானாள். இணைய வசதியே இல்லாத தோட்டத்தில் கைபேசியை மட்டும் கொடுத்துவிட்டு இலவச விளம்பரம் தேடிக்கொண்டதாக ஆளுங்கட்சி வேட்பாளர் திரு.குணா, எதிர்க்கட்சியின் மேல் குற்றம் சாட்டியிருந்தார். நாளிதழ்கள் எதிர்க்கட்சி வேட்பாளர் ராஜேந்திரனின் கோரமான முகத்தை முகப்பில் பிரசுரித்தன. திரு.குணா, கட்சியில் உள்ள செல்வாக்கை பலரும் அறிவர். வருங்காலத்தில் அவர் தொடர்ப்புத்துறை அமைச்சராக வரும் சாத்தியம் உண்டு என்பதால் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்று அந்தத் தோட்டத்தில் இணைய வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தந்தது. உள் நாட்டு தமிழ் கவிஞர்கள் அந்த நிறுவனத்தையும் துர்காவையும் புகழ்ந்து மரபுக்கவிதையெல்லாம் எழுதினர். அது இரு தரப்புக்குமே புரியவில்லை.

இருபது மாணவர்களுக்கும் குறைவாகப் பயிலும் டுரியான் தோட்டப்பள்ளியின் நிர்வாகம், பல வருடங்களாக விண்ணப்பித்தும் இணைய வசதி கிடைத்ததில்லை. துர்காவினால் ஒரே நாளில் அச்சிக்கல் தீர்க்கப்பட்டதை அடுத்து அனைத்து ஆசிரியர்களும் அவளது கைபேசிக்கு அழைத்து நன்றி கூறினர். இனி பள்ளியில் அனைத்து காரியங்களும் எளிமையாகவும் விரைவாகவும் நகரும் என ஆனந்தக்கண்ணீர் வடித்தனர். அவளுக்கு வாழ்ந்து

சொல்ல வந்த தோழி மறக்காமல் நீல கவுனையும் வாங்கிச்சென்றாள். தன்னால் ஒரு தேவதைபோல கைப்பேசி திறையில் தோன்ற முடியாதது துர்காவுக்கு கவலையைக் கொடுத்தது. ஆனால் மறுநாளில் இருந்து துர்காவின் சிக்கல்கள் பலமடங்காயின.

துர்காவின் தோட்டவீடு இரண்டு அறைகளைக் கொண்டது. அந்தச் சிறிய வீட்டில் அவளது பெற்றோர், மாமா அத்தை மற்றும் சித்தப்பா சின்னம்மா என ஏழு பேர் வசித்து வந்தனர். அவள் அப்பா தோட்டத்தில் செம்பனை குலை ஏற்றும் டிராக்டர் ஓட்டுவதால் அந்த வீடு அவருக்கு இலவசமாகக் கிடைத்திருந்தது. முதலில் ஏழு பேர் தங்குவதில் கெடுபிடி செய்த நிர்வாகம், அவ்வளவு உட்புறத்தில் உள்ள தோட்டத்தில் டிராக்டர் ஓட்ட புதியவர்கள் கிடைக்கமாட்டார்கள் என்பதால் வேறு வழியில்லாமல் பொறுத்துக்கொண்டது. ஆனால் ஆசிரியர்களுக்கு அதுதான் பெரும் சிக்கலாக மாறியது.

ஒவ்வொரு முறை வகுப்பு நடக்கும்போதும் துர்காவின் வீட்டில் எழும் கூச்சல்களால் ஆசிரியர்களுக்குப் பாடம் நடத்துவது சிக்கலாக இருந்தது. கோவிட் சிக்கலினால் பல நிறுவனங்களில் ஆட்குறைப்பு நடந்ததால் துர்காவின் சித்தப்பாவும் மாமாவும் வேலை இல்லாமல் இருந்தனர். செய்வதற்கு வேறு வேலை இல்லாததால் மலிவாகக் கிடைத்த மதுவை அருந்திவிட்டு அவர்கள் தத்தம் மனைவிமார்களிடம் அவ்வப்போது சண்டை போட்டனர். கெட்ட வார்த்தைகள் தாராளமாக வீட்டில் புரண்டன. அந்த வார்த்தைகளைச் சகிக்க முடியாமல் அவள் கைபேசியில் உள்ள மைக்கை அடைத்து வைக்கும்படி ஆசிரியர்கள் கட்டளையிட்டனர். இதனால் ஆசிரியரின் கேள்விகளுக்கு அவளால் பதில் சொல்ல முடியாமல் போனது. அவள் பாடத்தைக் கேட்டால் மட்டும் போதும் என ஆசிரியர்கள் கட்டளை இட்டிருந்தனர். ஒருபோதும் அவள் மைக்கை திறக்கவோ தன் கருத்தைக் கூறவோ அனுமதிக்கப்படவில்லை.

அந்தப் பள்ளியில் வேலை செய்யும் இரு இளம் பெண் ஆசிரியர்களுக்கு வேறு வகையான பிரச்சனை உருவாகியது. சரியாக அவர்களின் பாட வேளையின்போது துர்காவின் மாமாவும் சித்தப்பாவும் துர்காவின் அருகில் அமர்ந்துகொண்டு டீச்சரைப் பார்த்துச் சிரித்தபடி இருந்தனர். சில சமயம் தங்கள் கைகளில் உள்ள உடற்கட்டை முறுக்கிக் காட்டவும் தங்கள் தடிமனான மீசைகளை செய்தனர். வேலையிழப்பினால் சோர்ந்திருந்த அவர்கள் திடீர் புத்துணர்ச்சியுடன் சவரம் செய்து, வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டு தன் அருகில் அமர்ந்து பாடம் கேட்பது துர்காவுக்கு சங்கடமாக இருக்கும். திரவியங்களின் வாசம் கணினி வழி செல்லாது எனச் சொல்ல வாயெடுத்து அடக்கிக்கொள்வாள். ஆசிரியைகள் இருவரும் பொறுமையாகச் சொல்லிப் பார்த்தனர். இருவரும் கேட்பதாக இல்லை. எனவே துர்கா காமிராவையும் அடைத்து வைத்துவிட்டே பாடம் கேட்க கட்டளையிடப்பட்டது.

காமிராவைத் திறக்காதது அவளுக்கும் மகிழ்ச்சிதான். தன் மற்ற தோழிகளை போல அவளிடம் அழகான புதிய உடை இல்லை. காமிராவை அடைப்பது அவளுக்கு வசதியானது. துர்கா எல்லாருடைய முகங்களையும் கவனித்தபடி நெடுநேரம் மௌனமாகக் கைப்பேசியை வெறித்துப்பார்க்க பழகிக்கொண்டாள். சில சமயம் தூக்கம் வந்தாலும் அவள் கண்களைத் திரையில் இருந்து அகற்றுவதில்லை. தோழிகளின் முகங்களையும் அவர்கள் உடைகளையும் பார்ப்பதில் அலவில்லா ஆனந்தம் இருந்தது.

தேர்தலுக்கு இன்னும் ஒருவாரம் இருக்கும்போது எதிர்க்கட்சி வேட்பாளர் ராஜேந்திரன் மீண்டும் தோட்டத்திற்கு வந்தார். நெற்றி நிறைய விபூதியுடன் பிரகாசமாக இருந்தார். அவர் வருகை முன்னமே அறிவிக்கப்பட்டதால் துர்காவின் அம்மா வீட்டு வாசலில் அழகான கோலம் போட்டிருந்தார். இம்முறை தனக்கு நேர்ந்த களங்கத்தை துடைத்தெறியும் நோக்கம் அவருக்கு இருந்தது. தன் காரிலிருந்து சிறிய தொலைக்காட்சி ஒன்றை இறக்கியவர் தன் கண்முன்னாலேயே அதனைப் பொருத்தி இயக்கும்படி கடைக்காரனிடம் கட்டளையிட்டார். வேலை வேகமாக நடந்தது. தங்கள் வீட்டில் ஆஸ்ட்ரோ அலைவாங்கி பொறுத்தப்படுவதை துர்காவின் குடும்பம் மகிழ்ச்சியுடன் பார்த்தது. இனி தமிழகத்து சீரியல்களைப் பார்க்கலாம் என அவளது சின்னம்மாவும் அத்தையும் மகிழ்ந்தனர்.

தன் தவறுக்கு மன்னிப்புக்கோரிய ராஜேந்திரன், “இனி தொலைக்காட்சியில் உள்ள கற்றல் அலைவரிசையின் வழி துர்கா தடையற்ற கல்வியைத் தொடரலாம்” என சூழ்ந்திருந்த வட்டார நிருபர்களிடம் தகவல் கூறினார். துர்கா தொலைக்காட்சியின் முன் அமர்ந்து ‘டிடிக் டிவி’யில் ஒளிபரப்பாகும் பாடத்தைக் கூர்ந்து பார்ப்பதுபோல நிருபர்கள் புகைப்படங்களை எடுத்துக்கொண்டனர். அப்போதும் அவள் நீல வண்ண கவுனையே அணிந்திருந்தாள். கட்சியின் தொண்டர்களும் அந்தக் காட்சியைப் படம்பிடித்து சமூக ஊடகங்களில் பரவலாக்கினர். அந்தத் தொலைக்காட்சியில் ஆஸ்ட்ரோ அலைவரிசை, கற்றலுக்கென்றே பொருத்தப்பட்டதால் வேறு சேனல்கள் இயங்காதது அத்தைக்கும் சின்னம்மாவுக்கும் ஏமாற்றமாக இருந்தது. துர்கா நல்ல மதிப்பெண்களைப் பெற்றால் அனைத்து சேனல்களும் கிடைக்க தன் செலவிலேயே ஏற்பாடு செய்வதாக ராஜேந்திரன் வாக்களிக்க அவள் தலை உருண்டது.

மறுநாளில் இருந்து துர்காவின் விளையாடுவதற்கான நேரம் சுருங்கிப்போனது. அரசாங்க சேனலில் இரண்டு மணி நேரமும் தனியார் சேனலில் நான்கு மணி நேரமும் தினமும் பாடம் கேட்க அத்தையாலும் சின்னம்மாவினாலும் நிர்பந்திக்கப்பட்டாள். பள்ளியின் நாள் அட்டவணையின்படி அனைத்து வகுப்புகளிலும் பங்கெடுத்தாள். ஒரு நாளைக்கு பன்னிரெண்டு மணி நேரம்

அவள் கண்கள் ஒளியை உள்வாங்கியபடி இருந்தன. விளைவாக அவளுக்கு மூன்று நாட்களில் கண்கள் கடுமையாக வலிக்கத் தொடங்கின. ஓயாமல் கண்களில் இருந்து நீர் சொட்டியது. எரிச்சல் நிரந்தரமாக இருந்தது. நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சோதிக்கச் சென்றபோது மருத்துவர் உட்பட அவளை அனைவரும் கண்டுகொண்டனர். ஒரு மீட்டர் இடைவெளியை மறந்து அனைவரும் கொஞ்சினர். தான் அதிகம் பிரபலமாகிவிட்டதே அவளுக்கு அப்போதுதான் தெரிந்தது. துர்காவின் கண்களுக்கு கைபேசியாலும் தொலைக்காட்சியாலும் பிரச்சனை என மறுபடியும் செய்தி பரவி அது நாளிதழ்களில் வெளிவந்தது.

ஒரு சிறுமியின் கண்கள் பழுதடைய எதிர்க்கட்சி வேட்பாளர் காரணமாக இருந்ததை ஆளுங்கட்சி வேட்பாளர் குற்றம் சாட்டியதுடன் இதற்கு தானே ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பேன் என பேட்டி கொடுத்திருந்தார். அதன் விளைவாகத்தான் இன்று அவளுக்கு மடிக்கணினி பரிசாகக் கிடைத்தது. அது நவீன மடிக்கணினி என்றும் கண்களை பாதிக்கும் நீல வண்ணத்தை வடிகட்டியே ஒளியைப் பார்வைக்கு அனுப்பும் என்றும் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் தெரிவித்தார்.

வெளியில் பலத்த கர ஓசை இன்னமும் கேட்டுக்கொண்டிருந்தது. துர்கா முடுக்கப்படாத மடிக்கணினியில் தெரியும் தன் நிழல் பிம்பத்தை நெடுநேரம் பார்த்தாள். அந்தக் கணினி நீல வண்ணத்தை வடிகட்டும் என்பது அவளுக்கு வியப்பாக இருந்தது.

அவள் அன்று நான்காவது முறையாக தோழியிடம் நீல கவுனை இரவல் வாங்கியிருந்தாள். இந்தக் கணினி தான் அணிந்துள்ள நீல கவுனின் நிறத்தையும் வடிகட்டுமா என யோசித்துக் களங்கினாள். நீலம் இழந்த கவுனுடன் தான் தேவதைபோல தோற்றம் கொடுப்போமா எனக்குழம்பினாள். தான் அணிந்துள்ள நீல வண்ண உடை முடுக்கப்படாத கணினியின் கருந்திரையில் மங்கி தெரிவதைப் பார்த்து ஏமாற்றமும் வெறுப்பும் அடைந்தாள்.

Asian Literary Project "YOMU" ©Japan Foundation